සියලුම හිමිකම් ඇවිරිණි ]
முழுப் பதிப்புரிமையுடையது ]
All Rights Reserved]

# சக்தி வெளியீடு 5

2020

## முன்னோடிப்பரீட்சை - 01

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை – ஆகஸ்ட் 2020

ஆசிரியர் : த . மோகனதாஸ் (பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி, கொழும்பு – 04)

**NOBLE ACADEMY, WELLAWATTE**

**LASALLIAN COMMUNITY EDUCATION SERVICES, MODERA**

**வினாத்தாள் - I**

**45 நிமிடங்கள்**

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மட்டும்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |

இறுதிப்புள்ளிகள்

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

பரிசீலனை ஒப்பம்

| | |
|---|---|
| பாட ஆசிரியர் | |
| பகுதித் தலைவர் | |
| அதிபர் | |

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

❖ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

சுட்டெண் :..............................

❖ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

❖ இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே தருக.

❖ மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழக் கோடிடுக.

❖ விடைகளை எழுத வேண்டிய வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

❖ செய்கை வேலைக்காக ஒரு தாள் பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும்.

பக்கம் 2 ஐ பார்க்குக.

**01 தொடக்கம் 40 வரையான வினாக்களிற்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


- **1ம் 2ம் வினாக்களிற்கு அருகே தரப்பட்டுள்ள சொற்களுடன் பொருந்தக் கூடிய விடையைத் தெரிவு செய்க.**

01)

- ❖ நான்கு கால்களையுடையது
- ❖ அழகானது
- ❖ மரத்தால் செய்யப்பட்டது



**1**


**2**


**3**

02)

- ❖ முட்களைக் கொண்டது
- ❖ அழகானது
- ❖ காலத்தைக் காட்டுவது



**1**



**2**


**3**

- 3ம் 4ம் வினாக்களில் இரு உருக்கள் இடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன என இனங்காண்க.

03)



**A**



**B**

A, B ஆகிய இரு உருக்கள் இடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன.

1) 2 2) 3 3) 1

04)


**C**


**D**

C, D ஆகிய இரு உருக்களிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை.

1) 4 2) 3 3) 2

05) கட்டத்தில் உள்ள எண்களுக்குப் பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க

**14 + [20 X 2] = 54**


1) 10 x 2 2) 26 + 14 3) 36 - 4


06)வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க


5 → 8 → (20)  6 → 5 → (15)  10 → 5 → (....)

1) 25  2) 50  3) 30

07)பின்வரும் உருக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியும் உருவைத் தெரிவு செய்க.

1) 


2) 

3) 

08)வாட்ஸ் அப் (Whats app) என்பதன் தமிழ் வடிவம்.

1) முகநூல்  2) கட்செவி அஞ்சல்  3) நெகிழி

09)இன்று காலைக்கூட்டத்தின் போது வகுப்பு மாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்து விட்டான். பின்வரும் எக்காரணத்தினால் அவ்வாறு மயக்கம் அடைந்திருப்பான்.

01)நேற்று மாலை வரை விளையாடியமை.

02)கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை.

03)அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை.


10)நெல் - நாற்று எனின் பனை - ………………..

1) கன்று  2) வடலி  3) பிள்ளை

சுட்டெண்

11)நிசார் 20 பக்கங்களை வாசிக்கும் போது நிமால் 12 பக்கங்களை வாசிப்பான். நிமால் 9 பக்கங்களை வாசிக்கும் போது நிசார் எத்தனை பக்கங்களை வாசிப்பான்.

1) 15  2) 10  3) 18

12) 

இவ்வுருவில் $\frac{2}{5}$ பகுதிக்கு நிழற்றுவதற்கு நிறந்தீட்டப்பட்ட முக்கோணிகளை விட மேலும் எத்தனை முக்கோணிகளுக்கு நிறம் தீட்ட வேண்டும்?

1) 7  2) 8  3) 6

MOHAN

13)வருடமொன்றில் 30ம் திகதியைக் கொண்ட மாதங்கள் எத்தனை?

1) 11 2) 07 3) 04

- கீழ்வரும் படங்களைக் கொண்டு 14, 15 ம் வினாக்களுக்கு விடை தருக.



**100.00 ரூபாய்**



**124.00 ரூபாய்**

14) **03** பென்சில்களினதும் 03 புத்தகங்களினதும் மொத்த விலை யாது?

1) 224.00 ரூபாய் 2) 320.00 ரூபாய் 3) 300.00 ரூபாய்

15) **06** பென்சில்களினதும் **02** புத்தகங்களினதும் மொத்த விலை யாது?


1) 250.00 ரூபாய் 2) 248.00 ரூபாய் 3) 224.00 ரூபாய்

- பின்வரும் பாடலை வாசித்து விடை தருக.

**மழையும் பெய்ய வேண்டுமென்றால்**
**மரங்கள் வேண்டுமே!**
**மரங்கள் வளர வேண்டுமென்றால்**
**மனமும் வேண்டுமே!**

16)மழை பெய்ய வேண்டும் என்றால் என்ன வேண்டும் எனப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

1) மனம் 2) மழை 3) மரங்கள்

17) 

இவ்வுருவிலுள்ள முக்கோணங்கள் எத்தனை?


1) 4 2) 5 3) 6

18)பாடசாலைக் கட்டடம் ஒன்று 2 வருடங்களில் கட்டி முடிக்கப்படும் எனக் கூறப்பட்டது. அக் கட்டட வேலை 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமானது எனின் அக்கட்டடம் கட்டி முடிக்கப்படும் ஆண்டு எது?

1) 2002 2) 2001 3) 2004

19) காண்டீபனும் சுஜாதாவும் கணவன் மனைவி ஆவர். காண்டீபன் எனக்கு ஒரு மகன் இருப்பதாகக் கூறுவார். சுஜாதாவும் எனக்கு ஒரு மகன் இருப்பதாகக் கூறுவார். எனின் அக்குடும்பத்தில் உள்ளோர் எத்தனை பேர்?


1) 4 2) 2 3) 3

20) 

இத் திண்மவுருவில் உள்ள முகங்கள் எத்தனை?

1)10 2) 8 3) 6

- தாயக்கட்டை ஒன்று உருட்டப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.




21) இலக்கம் 5 இற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள இலக்கம் எது?

1) 4 2) 2 3) 3

22) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தினைத் தெரிவு செய்க.

1) மக்கள் கூட்டம் சென்றனர்.
2) ஒவ்வொரு பூவும் அழகானவை.
3) பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.

23) 20ம் நூற்றாண்டின் 4ம் தசாப்தத்திற்குரிய ஆண்டு.

1) 2004 2) 1935 3) 2035

24) ஊரைச் செழிக்க வைத்து; உல்லாச நடை பயின்று; வளைந்து குலுங்கி வையகமெல்லாம் சுற்றி வருவாள் ஒரு வனிதை... இதில் குறிப்பிடப்படுவது.

1) நிலா 2) நதி 3) கடலலை

25)

| | | | |
|---|---|---|---|
| △ | ⊡ | ☆ | ○ |
| ○ | △ | ⊡ | ☆ |
| ☆ | ○ | △ | ⊡ |
| ⊡ | ☆ | | △ |

வெற்றிடத்திற்குப் பொருத்தமான உரு எது?

1) △ 2) ○ 3) ☆

MOHAN

26)

| | | |
|---|---|---|
| தா | த் | தா |
| தா | த் | தா |
| தா | த் | தா |

இவ்வுருவில் தாத்தா என்ற சொல் எழுதப்பட்டுள்ள விதம் கீழே தரப்பட்டுள்ளது. இதனை இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் குறுக்காகவும் எத்தனை தடவை தாத்தா என்ற சொல்லை வாசிக்க முடியும்?

1)10 2) 8 3) 12


27) ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) காலையில் எழுதல் - சாப்பிடுதல் - காலைக்கடன் முடித்தல்

2) மாலையில் விளையாடுதல் - நித்திரை செய்தல் - இரவு உணவு உண்ணுதல்

3) இரவு உணவை உண்ணல் - பல்துலக்குதல் - நித்திரை செய்தல்

28) தாவரங்கள், கொடிகள், பூசனி, கத்தரி ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புடைமை பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



△ மூலம் வகைக்குறிக்கப்படுவது

1) கத்தரி 2) பூசனி 3) கொடிகள்

29) ■ = **5** ★ = **3** ▲ = **4** எனின் 60 ஐ விடையாகப் பெறுவதற்குப் பொருத்தமான உருத்தொடர்பு யாது?

**1)** ■ X ■ X ★

2) ★ X ★ X ■

3) ■ X ★ X ▲

30) சிறுவயதுப் பழக்கம் நீங்காது என்ற கருத்தைத் தரும் பழமொழியைத் தெரிவு செய்க.

1) அழுத பிள்ளை பால் குடிக்கும்


2) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

3) சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்.

31) நாளை மறுதினம் பாடசாலை விளையாட்டுப் போட்டி நடைபெறும். என அபிலேஷ் நேற்று முன்தினம் கூறினான். நேற்று புதன் எனின் விளையாட்டுப் போட்டி நடைபெறும் நாள் எது?

1) வியாழன் 2) வெள்ளி 3) சனி

MOHAN

32) 

சுட்டாள்.


இடைவெளிக்குப் பொருத்தமான சொற்கள் முறையே.

1) ஒரு , ஓர்  2) ஓர் , ஒரு  3) ஓர் , ஓர்

33) 

அப்பிள்கள் மேலிருந்து கீழாக 4 அடுக்குகளில் அடுக்கப்பட்டுள்ளன. இம்முறைக்கு ஏற்ப **5வது** அடுக்கிலும் **6வது** அடுக்கிலும் உள்ள அப்பிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?

2) 10  2) 11  3) 05

34) 


உருவின் **உள்ளே** உள்ள செங்கோணங்கள் எத்தனை?

3) 14  2) 16  3) 12

35)"எனது கவிதைக்கு முதற்பரிசு கிடைக்குமென்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. முதலில் அம்மாவிடம் சொல்ல வேண்டும்." இம்மாணவன் வெளிப்படுத்தும் உணர்வு.

1) அனுதாபம் தெரிவித்தல்  2) துக்கத்தினை வெளிப்படுத்தல்

3) மகிழ்ச்சியை வெளிப்படுத்தல்

36) 

இவ்வுரு தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) இங்கு 2 முக்கோணங்கள் உள்ளன.

2) செவ்வகங்களின் எண்ணிக்கையும் சதுரங்களின் எண்ணிக்கையும் சமனாகும்.

3) சதுரங்கள் 5 உள்ளன.

MOHAN

- உயரம் பாய்தல் போட்டியில் ஒரு பாடசாலையின் மாணவர்கள் ஒவ்வொரு சுற்றிலும் பெற்ற வெற்றி விபரங்கள் பின்வருமாறு.

| சுற்று | கவிசன் | பரதன் | கௌசி | ரகீம் |
|---|---|---|---|---|
| 1ம் சுற்று | □ | □ | □ | □ |
| 2ம் சுற்று | △ | □ | □ | □ |
| 3ம் சுற்று | △ | □ | △ | △ |

□ - பாய்ந்துள்ளார்

△ - பாயவில்லை


- **அட்டவணையைக் கொண்டு 37, 38 ஆம் வினாக்களிற்கான சரியான விடையைத் தெரிவு செய்க.**

37) உயரம் பாய்தல் போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்?

1) பரதன் 2) கௌசி 3) ரகீம்

38) முதல் மூன்று இடங்களையும் பெறாதவர் யார்?


1) கௌசி 2) ரகீம் 3) கவிசன்

39) 

இவ்வுருவை கோடுகளின் வழியே வெட்டும் போது எத்தனை சிறிய மரக்குற்றிகள் கிடைக்கும்.

4) 4 2) 6 3) 8

- ஒரு சதுரவடிவத் தாளை எடுத்து உரு A இல் உள்ளவாறு நடுவில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து, உரு B இல் காட்டப்பட்டுள்ளவாறு மீண்டும் இரண்டாக மடித்து உரு C யில் காட்டப்பட்டுள்ளவாறு முறிந்த கோடு வழியே வெட்டி அத்தாள் துண்டுகளாக்கப்பட்டது.




40) **C** துண்டை புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும் போது எத்தனை முக்கோணத் துண்டுகள் கிடைக்கும்.

1) 3 2) 4 3) 5

MOHAN

සියලුම හිමිකම් ඇවිරිණි ]
முழுப் பதிப்புரிமையுடையது ] s
All Rights Reserved]

2020

# சக்தி வெளியீடு

5

## முன்னோடிப்பரீட்சை - 01

**பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை – ஆகஸ்ட் 2020**

**ஆசிரியர் : த . மோகனதாஸ் (பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி, கொழும்பு – 04)**

**NOBLE ACADEMY, WELLAWATTE**

**LASALLIAN COMMUNITY EDUCATION SERVICES, MODERA**

**வினாத்தாள் - II**

**1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மட்டும்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |

இறுதிப்புள்ளிகள்

| | |
|---|---|
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

பரிசீலனை ஒப்பம்

| | |
|---|---|
| பாட ஆசிரியர் | |
| பகுதித் தலைவர் | |
| அதிபர் | |

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

- ❖ உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

சுட்டெண் :...................................

- ❖ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே தருக.
- ❖ மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழக் கோடிடுக.
- ❖ விடைகளை எழுத வேண்டிய வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ❖ செய்கை வேலைக்காக ஒரு தாள் பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும்.

*பக்கம் 2 ஐ பார்க்குக.*

**01)பின்வரும் பந்தியை வாசித்து 1 தொடக்கம் 6 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

இந்த ஆகாயம் கடலைப்போலத் தோன்றுகிறது. அந்தக் கடலிலே வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வது போல சந்திரன் காணப்படுகிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன. இந்த அழகிலே என் மனம் மிகவும் மகிழ்கிறது.

01) வானம் என்பதன் ஒத்தசொல் யாது?

………………………………………..……

02) பந்தியில் முதலாவது வாக்கியத்திலுள்ள உவமானத்தை எழுதுக.

………………………………………..……

03) விசிறியும் சுழியும் உள்ள சொல்லொன்றை எழுதுக.

………………………………………..……

04) மீனை என்பதன் பன்மை வடிவத்தை எழுதுக.

………………………………………..……

05) கடலிலுள்ள மீன்களைப் போல பரவுபவை எவை?

………………………………………..……

06) அ∴றிணைப் பன்மை வினைச்சொல்லை எழுதுக.

………………………………………..……

**02)பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளம் இடுக.**

1) பறவைக்கூட்டம் பறந்து சென்றன. (  )

2) மாணவர்கள் வேகமாகப் பாடசாலைக்குச் செல்கின்றனர். (  )

3) வானொலியில் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டது. (  )

**03)பின்வரும் மரபுத்தொடருக்கான கருத்தை எழுதுக.**

1) கண் திறத்தல் - ……………………………………...…………………

2) ஆறப்போடுதல் - ……………………………………...…………………

**04)பின்வரும் சுருக்கக்குறியீட்டிற்கான விரிவாக்கத்தினை எழுதுக.**

1) இ. ம. வ - ………………………………………………………………...…………

2) இ. பெ. கூ - ………………………………………………………………...…………

**05)சேர்த்தெழுதுக.**

1) நெல் + வயல் = ……………………… 2) பல் + பொடி =………..………………

**06)சரியான விடைையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) அவள் சிறந்த ஓட்ட …………………………… (வீராங்கனை, வீராங்கணை)

2) அவன் கொண்டு வந்த பொருள் ……………… (கனமாக, கணமாக) இருந்தது.

3) அதிபர் காலையில் …………………………….. (உறை, உரை) யாற்றினார்.

**07)பின்வரும் கருத்தைத் தரும் பழமொழியை எழுதுக.**

1) உத்தம நட்பு.

…………………………………………………………………………………………

2) கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.

…………………………………………………………………………………………

**08)தொடர்மொழிக்குரிய ஒருமொழியை எழுதுக.**

1) அறிஞர்கள் வாதிடும் களம் - ……………………………………

2) இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை - ……………………………………

**09)பேச்சுவழக்கில் தரப்பட்ட வாக்கியத்தை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக.**

1) நாங்கள் வாறோம் - ………………………………………………………………

2) மழை பெய்யுது - ………………………………………………………………

**10)பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1) அரசன் அரண்மனைக்குச் சென்றான்.

…………………………………………………………

2) அவன் மாமா வீட்டிற்குச் சென்றான்.

…………………………………………………………

**(26 X 1 = 26 புள்ளிகள்)**

**11)பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) Class room - ………………………… 2) Eyes - ………………...……….

**12)பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1) உங்களது சுகம் எப்படி? - ………………………… 2) அதிபர்…………………………

**13)பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) கலுலேல்ல - ……………...……….. 2) அம்(B)ப (G)கச -……………………..

**14)பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

**1.** ஆசிரியர் - ……………….………… 2) புத்தகம் -…………..……………………

**(08 X 1 = 08 புள்ளிகள்)**

- **15 தொடக்கம் 29 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதுக.**

**15)** 5, 2, 1, 6 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய நான்கிலக்க எண்ணை உருவாக்குக.

..…………………………………………

**16)** 1000 + 300 + 10 + 6 என்பதால் வகைக்குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

……………………………………………..

**17)** 20 இலிருந்து 6 ஐக் கழித்து வரும் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.

……………………………………………..

**18)** கீழே தரப்பட்ட எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

4507, 2325, 1576, 6175 ………………………………..………………………...

**19)**கீழே தரப்பட்ட எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

1) 20, 35, 50, 65, ………………

2) 100, 96, 92, 88, ………………

**20)**72 பென்சில்களை 6 மாணவர்களிடையே சமனாகப் பகிர்ந்தால் ஒருவருக்குக் கிடைக்கும் பென்சில்கள் எத்தனை?

……………………….……………….....


**21)** 25 மாம்பழங்களில் 2/5 பங்கு மாம்பழங்கள் விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் மாம்பழங்கள் எத்தனை?

..…………………………………………..

**22)** 


கடிகாரம் காட்டுவது மாலை நேரம் எனின் அந்நேரத்தை நியம நேரமாக எழுதுக.

…………………………………………..

**23)** 

அருகே காட்டப்படுவது சதுரமுகியாகும். எனவே,

1) அதன் முகங்கள் எத்தனை? ……………………………………………

2) அதன் உச்சிகள் எத்தனை? ……………………………………………


MOHAN

**24)** துசா 15km 600m தூரத்தைப் புகையிரதத்திலும் 6km 800m தூரத்தைப் பேருந்திலும் சென்றாள் எனின் துசா சென்ற மொத்தத் தூரம் யாது?

………….. km ……………… m

**25)** பாத்திரமொன்றில் 172 தாமரைப்பூக்கள் வீதம் 3 பாத்திரங்களிலுள்ள தாமரைப்பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

…………………………………………

**26)** 

1) நிறந்தீட்டப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

……………………………………...

2) முழு உருவின் அரைப்பகுதிக்கு நிறந்தீட்ட வேண்டுமாயின் மேலும் எத்தனை கட்டங்களுக்கு நிறந்தீட்ட வேண்டும்?


………………………………………

**27)** சியானா ஒரு சட்டையை வாங்குவதற்காக கடைக்குச் சென்றாள். சட்டையின் விலை 1450.00 ரூபாய் ஆகும். ஆயினும் அவளிடம் 825.00 ரூபாய் மாத்திரம் இருந்தது எனில் அதனை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

………………………………ரூபாய்

**28)** 10l 500ml கொள்ளும் தாங்கி ஒன்றின் ஒரு பகுதி நீரினால் நிரப்பப்பட்டிருந்தது. அதில் மேலும் 4l 475ml நீரை ஊற்றிய போது தாங்கி முற்றாக நிரம்பியது. தாங்கியில் ஆரம்பத்திலிருந்த நீரின் கனவளவு யாது?

……………... l ……………….. ml

**29)** 

இவ்வுருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?

..………………………………………

**(15X2 = 30 புள்ளிகள்)**

- **30 தொடக்கம் 59 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

**30)** பகவத்கீதையை புனிதநூலாகக் கொண்ட மதத்தவர் யார்?

1) இந்துக்கள் 2) இஸ்லாமியர்கள் 3) பௌத்தர்கள்

**31)** ஒலிம்பிக் போட்டியில் முதன் முதலில் இலங்கைக்கு பதக்கத்தை பெற்றுத் தந்தவர்?

1) சுதந்திகா ஜெயசிங்க 2) டங்கன் வைற் 3) குமார் சங்கக்கார

MOHAN

**32)** இலங்கையின் தேசிய விளையாட்டை விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை?

1) 8 2) 6 3) 7

**33)** தனியாகப் பயன்படுத்தும் பொருள் அல்லாதது?

1) பற்றூரிகை 2) காலணி 3) வானொலி

**34)** உடல் வளர்ச்சியடைவதற்காக உண்ணும் போசணை எது?

1) புரதம் 2) விற்றமின்கள் 3) மாப்பொருள்

**35)** தியானச் செயற்பாட்டின் மூன்றாவது படிமுறை.

1) திடசித்தம் 2) பிரார்த்தனை 3) மலர்வு

**36)** இலங்கையின் தேசிய மலர் எது?

1) காட்டுமல்லிகை 2) தாமரை 3) நீலோற்பலம்

**37)** முலையூட்டி விலங்கு.

1) உடும்பு 2) கீரி 3) முதலை

**38)** எட்டுக்கால்களை உடைய பிராணி.

1) நண்டு 2) நுளம்பு 3) சிலந்தி

**39)** புற்றை அமைத்து வாழும் பிராணி.

1) பாம்பு 2) எலி 3) கறையான்

**40)** அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் எது?

1) நெருப்புக்காய்ச்சல் 2) டெங்கு 3) மாலைக்கண்

**41)** இலைகளை இணைத்துக் கூடமைக்கும் பிராணி.

1) மரங்கொத்தி 2) தேனீ 3) செவ்வெறும்பு

**42)** பழுதடைந்ததும் நீல நிறமாக மாறும் கிழங்கு.

1) உருளைக்கிழங்கு 2) மரவள்ளிக்கிழங்கு 3) கரட்

**43)** தேசப்படங்களில் புகையிரதப் பாதையைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்.

1) கறுப்பு 2) நீலம் 3) மஞ்சள்

**44)** மாலை நேரத்தில் மலரும் பூ.

1) அந்திமந்தாரை 2) போகன்விலா 3) மல்லிகை

**45)** அதிக வித்துக்களைக் கொண்ட பழம்.

1) மாம்பழம் 2) றம்புட்டான் 3) பலாப்பழம்

**46)** தியானச் செயற்பாடுகளைச் செய்வதால் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று.

1) பதற்றம், மனப்பயம் அதிகரிக்கும்.
2) பல்வேறு நோய்கள் ஏற்படும்.
3) மன அமைதியின்மையைக் கட்டுப்படுத்தலாம்.

**47)** பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெறுவதற்காகச் செல்ல வேண்டிய இடம் எது?

1) பிரதேச சபை 2) பிரதேச செயலகம் 3) மாவட்ட செயலகம்

**48)** தரப்பட்ட குறியீடு குறிப்பது.



1) முன்னால் பாதசாரிக் கடவை.
2) முன்னால் சிறுவர் கடவை.
3) பாதசாரிகள் கடக்குமிடம்.

**49)** இலங்கை நாட்டிற்கே உரித்தான தாவரம் எது?

1) தேக்கு 2) பெரும்பிரம்பு 3) வேம்பு

**50)** சுவரோவியங்களுக்கு பிரசித்தமான இடம்.

1) சீகிரியா 2) காலிக்கோட்டை 3) இசுறுமுனிய

**51)** இலங்கையில் விளையாடப்படும் கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.

1) துடுப்பாட்டம் 2) கிட்டிப்புள்ளு 3) வலைப்பந்தாட்டம்

**52)** தாள்களை ஒன்றோடு ஒன்று பிணைப்பதற்குப் பயன்படும் உபகரணம் எது?

1) துளைகருவி 2) கைவில்லை 3) பிணைகருவி

**53)** இரவில் நடமாடும் பிராணியாக அமையாதது.

1) ஆந்தை 2) பாம்பு 3) காகம்

**54)** இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது?

1) தென்மாகாணம் 2) ஊவாமாகாணம் 3) வடமாகாணம்



MOHAN

**55)** மேசன் (கொத்தன்) பயன்படுத்தும் உபகரணம்.



1)



2)



3)

**56)** மீனவர்கள் சிறுமீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்துள்ள உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

1) கரைவலை 2) அத்தாங்கு 3) நாம்புவ

**57)** கண்ணாடிக் கழிவுகளை இட வேண்டிய குப்பைத் தொட்டியின் நிறம் யாது?

1) சிவப்பு 2) நீலம் 3) செம்மஞ்சள்

**58)** வெளிச்சத்தினைப் பெறுவதற்கான மின்மினிப் பூச்சியை தனது கூட்டினுள் ஒட்டி வைக்கும் பிராணி.

1) தூக்கணாங்குருவி 2) மழைக்குருவி 3) கும்பிடுபூச்சி

**59)** பூனை மிகவும் விரும்பி உண்ணும் தாவரம்

1) வல்லாரை 2) குப்பைமேனி 3) கோரைப்புல்

**(30X1 = 30 புள்ளிகள்)**

**60)** **"உமது நண்பனிடம் உள்ள உமக்குப் பிடித்த நற்பழக்கங்கள்"** எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக அமைதல் வேண்டும்.

**1)**..........................................................................................................

..........................................................................................................

**2)**..........................................................................................................

..........................................................................................................

**3)**..........................................................................................................

..........................................................................................................

**(3X2 = 6 புள்ளிகள்)**

MOHAN

# சக்தி வெளியீடு

**முன்னோடிப்பரீட்சை - 01**

**விடைத்தாள்**

## வினாத்தாள் - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **01)** 03 | **08)** 02 | **15)** 02 | **22)** 03 | **29)** 03 | **36)** 02 |
| **02)** 02 | **09)** 03 | **16)** 03 | **23)** 02 | **30)** 02 | **37)** 01 |
| **03)** 01 | **10)** 02 | **17)** 03 | **24)** 02 | **31)** 01 | **38)** 03 |
| **04)** 02 | **11)** 01 | **18)** 02 | **25)** 02 | **32)** 01 | **39)** 03 |
| **05)** 02 | **12)** 03 | **19)** 03 | **26)** 01 | **33)** 02 | **40)** 02 |
| **06)** 01 | **13)** 01 | **20)** 02 | **27)** 03 | **34)** 03 | |
| **07)** 03 | **14)** 03 | **21)** 02 | **28)** 01 | **35)** 03 | |

**(40 X $2\frac{1}{2}$ = 100)**

## வினாத்தாள் - 2

**01)** 1) ஆகாயம் 2) கடலை 3) மீன்களை

4) மீன்களை 5) நட்சத்திரங்கள் 6) பரவுகின்றன.

**02)** 1) ( X ) 2) ( √ ) 3) ( X )

**03)** 1) அறிவுண்டாதல் 2) பிற்போடுதல் / காலந்தாழ்த்துதல்

**04)** 1) இலங்கை மத்திய வங்கி.

2) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

**05)** 1) நெல்வயல் 2) பற்பொடி

**06)** 1) வீராங்கனை 2) கனமாக 3) உரை

MOHAN

**07)** 1) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

**08)** 1) பட்டிமன்றம் 2) பன்னசாலை

**09)** 1) நாங்கள் வருகின்றோம் / நாங்கள் வருகிறோம்

2) மழை பெய்கின்றது / மழை பெய்கிறது.

**10)** 1) அரசி அரண்மனைக்குச் சென்றாள்.

2) அவள் மாமா வீட்டிற்குச் சென்றாள்.

**(26 X 1 = 26)**

---

**11)** 1) வகுப்பறை 2) கண்கள்

**12)** 1) How are you? 2) Principal

**13)** 1) கரும்பலகை 2) மாமரம்

**14)** 1) குருவரயா 2) பொ(த்)த

**(8 X 1 = 8)**

---

**15)** 6521

**16)** 1316

**17)** XIV

**18)** 6175, 4507, 2325, 1576

**19)** **1)** 80 **2)** 84

**20)** 12

**21)** 15

**22)** 15 : 00

**23)** 1) 6 **2)** 8

**24)** 22km 400m

**25)** 516

**26)** 1) $\frac{3}{10}$ **2)** 2

**27)** 625.00 ரூபாய்

**28)** 6l 025ml

**29)** 4

**(15 X 2 = 30)**

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **30)** 1 | **35)** 1 | **40)** 1 | **45)** 3 | **50)** 1 | **55)** 2 |
| **31)** 2 | **36)** 3 | **41)** 3 | **46)** 3 | **51)** 2 | **56)** 2 |
| **32)** 2 | **37)** 2 | **42)** 2 | **47)** 2 | **52)** 3 | **57)** 1 |
| **33)** 3 | **38)** 3 | **43)** 1 | **48)** 1 | **53)** 3 | **58)** 1 |
| **34)** 1 | **39)** 3 | **44)** 1 | **49)** 2 | **54)** 3 | **59)** 2 |

**(30 X 1 = 30)**



MOHAN